1979 மார்ச் 20] [பேரவைத் துணைத் தலைவர்]

இந்த இரண்டையும் தவிர வேறு ஏதாவது ஒழுங்குப் பிரச்னை இருந்தால் எழுப்ப வேண்டுமே தவிர, ஒவ்வொருவரும் கொடுத்ததைப் பற்றிப் படிக்க ஆரம்பித்தால் வேறு அலுவல்களுக்கு எப்பொழுது போவது, எப்படி நடத்துவது ? (குறுக்கீடு) (திரு. ரா. கிருஷ்ணன், திரு. துரை கலியமூர்த்தி ஆகியவர்கள் எழுந்தார்கள்). உறுப்பினர்கள் அனைவரும் தயவு செய்து உட்கார வேண்டும். இப்பொழுது மணி 11-30 ஆகப்போகிறது. நீங்கள் கொடுத்தது இன்றைக்கு வரவில்லை என்றால், நாளைக்கு, நாளை மறுநாள் என்று வரும். எனவே, உட்காருங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : நான் சொல்வது வேறு விஷயம்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது வேண்டாம். திரு. கிருஷ்ணன் அவர்கள் பேசியதை நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதை அனுமதிக்க முடியாது.

(3) அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) ஆளுநர் அவர்களிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1979—80—ஆம் ஆண்டின் செலவிற்கான முன் பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

"In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India I, Prabhudas B. Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Advance Grants during the year 1979—80 as detailed in the annexure enclosed."

(முற்பகல் 11-30)

(6) 1979—80 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து. 1979—80 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 மார்ச் 20

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களது பரிந்துரையின்மேல்:

"1979–80 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 1979, மார்ச் 20 ஆம் நாளிட்ட அறிவிப்பில் இரண்டாவது வரிசையில் 1 முதல் 58 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே 4வது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1980 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் முடிய உள்ள நிதி ஆண்டிற்கான செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அரசுக்கு கோரிய தொகை வழங்கப் பெற்றது.

பேரவையினால் நிறைவேற்றப் பெற்ற முன்பண மானியக் கோரிக்கைகளின் விவரம்:

A. வருவாய்க் கணக்கில் செலவு.

(1)	(2)	(3)	(4) (ரூபாய் ஆயிரத்தில்)
கோரிக்கை	1	நிலவரித் துறை	81,21
௸	2	மாநில ஆயத் தீர்வை ..	12,55
௸	3	மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் ..	25,87
௸	4	பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். ..	1,10,36
௸	5	முத்திரைத் தாள்கள் நிர்வாகம்	11,63
௸	6	பத்திரப் பதிவு	44,89
௸	7	மாநிலச் சட்ட மன்றம் ..	12,94
௸	8	தேர்தல்கள்	3,63
௸	9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமை பீடப் பணியாளர்கள் ..	2,41,66

A. வருவாய்க் கணக்கில் செலவு— தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4) (ரூபாய் ஆயிரத்தில்)
கோரிக்கை	10	பால் வழங்கு திட்டங்கள் ..	15,89
ஷை	11	மாவட்ட நிர்வாகம்	3,18,89
ஷை	12	1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் ..	26,90
ஷை	13	நீதி நிர்வாகம்	96,77
ஷை	14	சிறைச்சாலைகள்	94,44
ஷை	15	காவல்துறை	6,43,31
ஷை	16	தீயணைப்புப் பணிகள் ..	48,06
ஷை	17	கல்வி	34,75,52
ஷை	18	மருத்துவம்	9,10,00
ஷை	19	பொதுச் சுகாதாரம்	7,01,71
ஷை	20	வேளாண்மை	7,34,11
ஷை	21	மீனளம்	40,67
ஷை	22	கால்நடை வளர்ப்பு	1,94,29
ஷை	23	கூட்டுறவு	1,21,04
ஷை	24	தொழில்கள்	1,78,75
ஷை	25	சின்கோனா	31,08
ஷை	26	கைத்தறியும் நெசவுத் தொழிலும்	85,59
ஷை	27	கதர்	25,42

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4) (ரூபாய் ஆயிரத்தில்)
ஷை	28	சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன ..	6,81,61
ஷை	29	தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்	82,42
ஷை	30	சமூக நலன்	1,15,76
	31	பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் —	3,07,76
ஷை	32	பின்தங்கிய வகுப்பினர் நலன்.	1,17,40
ஷை	33	வீட்டு வசதி	1,60,99
ஷை	34	நகர் பகுதி மேம்பாடு ..	1,63,40
ஷை	35	நுகர் பொருள் வழங்கல் ..	81,40
ஷை	36	பாசனம்	3,76,14
ஷை	37	பொதுப் பணிகள்—கட்டடங்கள்	46,45
ஷை	38	பொதுப் பணிகள் — பணியாளரும், கருவிகளும் இயந்திர சாதனங்களும்.	1,20,14
ஷை	39	சாலைகளும் பாலங்களும் ..	5,89,52
ஷை	40	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து	6,59
ஷை	41	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	1,14
ஷை	42	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் ..	4,98,42

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 20]

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4)
			(ரூபாய் ஆயிரத்தில்)
கோரிக்கை	43	பல்வகை	7,55,52
ஷை	44	எழுதுபொருள்-அச்சுத்துறை ..	1,37,32
ஷை	45	காட்டு வளத் துறை ..	90,32
ஷை	46	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.	2,59,97
ஷை	47	தகவல், சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்ப வியல்	23,86
	மொத்தம்—	A. வருவாய்க் கணக்கு ..	1,29,03,31

B வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

கோரிக்கை	48	ஜமீன்தார்களுக்கு இழப்பீடு ..	1,33
ஷை	49	பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு	80
ஷை	50	வேளாண்மை குறித்த மூல தனச் செலவு	1,85,35
ஷை	51	தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ..	89,90
ஷை	52	பாசனம் குறித்த மூலதனச் செலவு	5,24,37
ஷை	53	பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்ட டங்கள்	2,11,28

(1)	(2)	(3)	(4)
			(ரூபாய் ஆயிரத்தில்)

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.

கோரிக்கை	54	சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	1,75,84
ஷை	55	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	9,59
ஷை	56	காட்டுவள மூலதனச் செலவு.	89,12
ஷை	57	பல்வகை மூலதனச் செலவு ..	93,17
		மொத்தம்—B. மூலதனக் கணக்கு ..	13,80,75

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

கோரிக்கை	58	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் ..	19,07,25
		பெரு மொத்தம் ..	1,61,91,31

(3) அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) ஆளுநரின் இசைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஒரு அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவை தெரிவித்துள்ளார்கள்.